# பத்திரிக்கைச் செய்தி

இராணிப்பேட்டை மாவட்டத்தில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ், மாவட்ட சமூகநல அலுவலகத்தில், குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் –2005 பிரிவின் கீழ் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் (ம) தட்டச்சர் (Junior Assistant cum Typist) பணியிடத்தை நிரப்பிடும் பொருட்டு தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.

**தகுதிகள்**

1.கணினி சார்ந்த பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும்.

2.தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சு முடித்திருக்க வேண்டும்.

3.வயது வரம்பு – பொதுபிரிவினருக்கு 30 வயது வரை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 32 வயது வரை, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 35 வயது வரை.

4.கணினி மற்றும் தட்டச்சு சார்ந்து முன் அனுபவம் உள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5.முற்றிலும் தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான இப்பணிக்கு மாத தொகுப்பூதியம் ரூ.12,000/– வழங்கப்படும்.

இப்பதவிக்கான விண்ணப்பம் மற்றும் தகவல்களை இராணிப்பேட்டை மாவட்ட இணையதள முகவரியான https://ranipet.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விருப்பமுள்ள தகுதியான நபர்கள் தங்களது சுய விபரங்களை விண்ணப்ப படிவத்தில் பூர்த்தி செய்து 10.02.2026 அன்று மாலை 05.00 மணிக்குள் மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், 4வது தளம், C பிளாக், இராணிப்பேட்டை மாவட்டம் – 632403. என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

26/1/26

2/2

மாவட்ட ஆட்சித் தலைவர்
இராணிப்பேட்டை மாவட்டம்.

Scanned with OKEN Scanner